அதேபோன்று, அங்கே தொழிற்சங்கம் வைப்பதற்கான அலுவலகத்தை நாங்கள் தேடும்போது, அங்கே இடம் கொடுப்பதற்கு முன்வந்த வீட்டு உரிமையாளர்கள் மிரட்டப்படுகிறார்கள். தொழிற்சங்கத்தினுடைய தலைவர்களெல்லாம் மிரட்டப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, 30-4-2010 அன்று தொழிற்சங்க உரிமை வழங்குவதற்கான . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொழிற்சங்கத்திற்காக வாதாடுவது, தொழிலாளர்களுக்காகப் பரிந்து பேசுவது, இவற்றில் எனக்கு எந்தவிதமான கருத்து மாறுபாடும் இல்லை. தொழிலாளர்களுடைய வாழ்வுதான், நாட்டின் நல்வாழ்வு என்பதை எங்களுக்கெல்லாம் உணர்த்தியவர் எங்கள் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, தொழிலாளர்களைப் பற்றிப் புதிதாக எங்களுக்கு யாரும் வகுப்பு நடத்த வேண்டிய அவசியமில்லை. ஆனால், இந்தப் போராட்டத்தில் கைவிலங்கிட்டு அழைத்துச் சென்றதாகச் சொல்லப்பட்ட செய்தியைக் கேள்விப்பட்டதும், நானே பதைத்துப்போய், அதைப் பற்றி விசாரித்தபோது, அப்படி நிச்சயமாக அந்தத் தலைவருக்கு கைவிலங்கு போடப்படவில்லை என்பதை என்னிடத்திலே நிரூபித்திருக்கின்றார்கள். தொழிற்சங்கத் தலைவர்கள் என்னைச் சந்தித்தபோது, அவர்களிடத்திலே நானும் அதைப் பற்றி விளக்கியிருக்கிறேன்; அவர்களும் அதை மறுத்துப் பேசாமல் ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள்.

ஒன்றை உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தொழிற்சங்கப் போராட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் அல்லது இந்த அரசு அல்லது எங்களுடைய தோழமைக் கட்சியினர் யாரும் வெறுப்பவர்கள் அல்ல; அதை ஏற்க முடியாது என்று சொல்பவர்களும் அல்ல. ஆனால், போராட்டத்திலேயே நாற்பதுக்கும் மேற்பட்ட கார்கள் அங்கே உடைபட்டிருக்கின்றன; நொறுக்கப்பட்டிருக்கின்றன என்ற இந்தச் செய்தியையும் இணைத்து, அதுதான் போராட்டம் என்று சொன்னால், அதை நாட்டில் அமைதியை விரும்புகின்ற யாரும் ஏற்றுக்கொள்ள முடியாது.